**செ. கு. எண்**: 364

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 11.10.2012

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.சந்திரன் அவர்கள் 27.9.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், கோயம்பேடு போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.சரவணன் அவர்கள் 3.10.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. T.தரணிதரன் அவர்கள் 4.10.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல் ஆயுதப்படை C-கம்பெனி, 14–வது அணியில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. M.சிவபிரதாப் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் 4.10.2012 அன்று மருத்துவமனையின் மாடியிலிருந்து தவறி விழுந்ததில் பலத்த காயமடைந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர காவல், அரசு ராஜாஜி மருத்துவமனை காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. U.கோபிநாத் அவர்கள் 5.10.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. தரணிதரன், தலைமைக் காவலர் திரு. சந்திரன், முதல்நிலைக் காவலர் திரு. கோபிநாத், காவலர்கள் சரவணன், மற்றும் திரு. சிவபிரதாப் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் நலக் குறைவால் காலமான காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. T.தரணிதரன், தலைமைக் காவலர் திரு. A.சந்திரன், முதல் நிலைக் காவலர் திரு.U.கோபிநாத், காவலர் திரு. A.சரவணன், மற்றும் மருத்துவமனையின் மாடியிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்த காவலர் திரு. M.சிவபிரதாப் ஆகியோரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**